I.D. 22/2020
28–12–2022

M.W.1 சக்திவேல்
குறுக்கு விசாரணை

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் B.E. Mechanical Engineering படித்துள்ளேன். விபத்து சம்பந்தமாக தகவல் உங்களுக்கு யார் சொன்னது என்றால் நடத்துனர் சொன்னார். விபத்து நடந்தது சம்பந்தமாக எத்தனை மணிக்கு உங்களுக்கு போன் வந்தது என்றால் விடியற்காலை சுமாராக 6 மணி இருக்கும். நீங்கள் விபத்து நடந்த இடத்திற்கு செல்லும் போது அடிபட்டவர் இருந்தாரா என்றால் இல்லை. விரிவான விபத்து அறிக்கை நீங்கள் தயார் செய்தது தானா என்றால் ஆமாம். விபத்து அறிக்கை Ex. M.10 உள்ள கையெழுத்து என்னுடையது தான். Ex.M.10–ல் எத்தனைமணிக்கு நீங்கள் விபத்து நடந்த இடத்திற்கு போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 12–02–2016–ம் தேதி காலை 8.55–க்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே நான் 6 மணிக்கு போனதாக சொன்னது தவறு என்றால் நான் சுமாராக என்று தான் குறிப்பிட்டேன். விபத்து நடந்ததாக சொன்ன நேரம் டிரைவர் எத்தனை மணி என்று Ex. M.11–ல் எழுதியுள்ளார் என்றால் சுமாராக காலை 9 மணி என்று எழுதியுள்ளார். Ex. M.10 –ல் மோட்டார் சைக்கிளில் வந்தவர் தூக்கி எறியப்பட்டார் என்று நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரி. நீங்கள் விபத்து நடந்த இடத்திற்கு செல்லும் போது அடிப்பட்டவர் அங்கு இல்லை என்று சொல்லியுள்ளீர்கள் அவ்வாறு இருக்க மோட்டார் சைக்கிளில் வந்தவர் தூக்கி எறியப்பட்டார் என்று எவ்வாறு குறிப்பிட்டீர்கள் என்றால் மோட்டார் சைக்கில் பள்ளத்தில் இருந்தது. Ex. M.10 –ல் மோட்டார் சைக்கிள் பள்ளத்தில் கிடந்தது என்று குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. நீக்஡ள் விபத்து நடந்த இடத்திற்கு போகாமல் அலுவலகத்தில் இருந்தே இந்த அறிக்கையை ஓட்டுனரை பழிவாங்கும் நோக்கில் பொய்யாக தயார் செய்திருக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல் வரும் போது வேற்றுப்பணியில் தான் வருகிறீர்கள் என்றால் சரி. வேற்றுப்பணியில் வரும்போது உங்களுக்கு முழு சம்பளம் உண்டு என்றால் சரி. வழக்கு சம்பத்தப்பட்ட ஓட்டுனருக்கு விடுமுறையும் கிடையாது

சம்பளமும் கிடையாது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. உங்கள் நிர்வாகம் சம்பந்தப்பட்ட நீங்கள் தான் பல வழக்குகளில் சாட்சியம் அளித்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு நிர்வாகத்தினால் யாருக்கு விடுப்பு வழகங்கப்பட்டது யாருக்கு வழங்கவில்லை என்பது தெரியும் எனறால் சரியல்ல. அரசு போக்குவரத்துக்கு காப்பீடு உண்டா இல்லையா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக மோட்டார் வாகன விபத்து நீதிமன்றத்தின் தீர்ப்புரை Ex. M.14 படித்து பார்த்தீர்களா என்றால் இல்லை. Ex. M.14 –ல் என்ன இருக்கு என்று தெரியாமல் உங்கள் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்ய காரணம் என்ன என்றால் நிர்வாகத்திற்கு இழப்பீடு வந்துள்ளது அதை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

( மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**தலைமை தாங்கும் அதிகாரி,**
**தொழிலாளர் நீதிமன்றம்,**
**திருச்சி**